# பொன்னேரி நகராட்சி
# நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் **2023** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **31.03.2023** வெள்ளிக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் பிப்ரவரி **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 194 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: பதிவு செய்யப்படுகிறது**

**பொருள் எண் 2**

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மற்றும் குடிநீர் பிரிவின்கீழ் பணிபுரியும் பணியாளர்கள் **2022**-23 ஆண்டிற்கான சீருடைத்துணி , சேலை , சட்டை , தலைப்பாகைத்துணி போன்ற இனங்கள் வழங்க வேண்டி உள்ளது. இந்நகராட்சியில் பணிபுரியும் ஆண் பணியாளர்கள் **16**, பெண் தூய்மைப்பணியாளர்கள் **10** நபர்கள் , குடிநீர் பிரிவு பணியாளர்கள் **8** நபர்களுக்கு சீருடைத்துணிகள் வழங்க வேண்டியிருப்பதால் அரசாணை எண் **158** நாள் **16.11.2015**ல் தெரிவித்துள்ளவாறு அளவீடுகளில் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான மேலாளர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து வாங்கவும், அதற்கான அதற்கான தோராய செலவினம் ரூ. **3,00,000** /-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 397/2022 / அ1

நகர்மன்ற தீர்மான எண்: 195 நாள்: 31.03.2023

**தீர்மானம்: மன்றம் அனுமதி அளிக்கிறது .**

**பொருள் எண் 3**

பொன்னேரி நகராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக ஏற்கனவே **30** DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி டெங்கு ஒழிப்பு DBC பணியாளர்களின் ஒப்பந்தம் ( Green Service Trust ) **31.03.2023** உடன் முடிவடைவதால் இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தொடர்ச்சியாக வந்த வண்ணம் உள்ளதால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக DBC பணியாளர்கள் **28** நபர்கள் மட்டும் சப்ளை செய்யவும், Green Service Trust நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை **30.04.2023** வரை நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கு .

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 341/2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 196 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 4**

பொன்னேரி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள காம்பாக்டர் வாகனம் பழுதடைந்துள்ளதால் பொதுசுகாதாரப்பணிகள் பாதிப்படைகிறது. எனவே பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வாடகை அடிப்படையில் டிராக்டர் வாகனத்தை பயன்படுத்தி பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொண்டமைக்கும் , அதற்கான தோராய செலவினம் ரூ. 3.25/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 511/2021 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 197 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 5**

பொன்னேரி நகராட்சியில் வரிவசூல் பணிகளில் முன்னேற்றம் அடைந்திட பொதுமக்கள் அனைவரையும் வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்திட அறிவிப்பு செய்திட திரு. பி. மதன் என்பவர் மூலம் ஆட்டோ விளம்பரம் வாடகை அடிப்படையில் செய்தமைக்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.40000 /-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 6 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 198 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

**பொருள் எண் 6**

பொன்னேரி நகராட்சியில் தெருமின்விளக்கு பராமரிப்பு பணிக்காக LED விளக்குகள் கொள்முதல் செய்திட 06.1.2023 அன்று ரூ.117.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள உரிய வழிமுறைகளை பின்பற்றி பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ள கால அவகாசம் தேவைப்படுவதால் தெருமின்விளக்குகள் பழுதாவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை தடுத்திட தெருமின்விளக்குகளை உடனடியாக சரிசெய்திட ஆண்டு ஒப்பந்ததாரரிடம் தேவையான பொருட்களை கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ 9.50 /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 341/2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 199 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

**<u>பொருள் எண் 7</u>**

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினிகள், புகைபோக்கி கொசு ஒழிப்பு மருந்துகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குளோரினேஷன் செய்ய பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் , பினாயில், அபேட், இதர பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை ஆண்டு ஒப்பந்ததாரரிடம் கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ **9.50** /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 341 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 200 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

**<u>பொருள் எண் 8</u>**

பொன்னேரி நகராட்சியில் **2023**ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற உள்ள தேர்த்திருவிழாவை முன்னிட்டு தேர் வீதி உலா செல்லும் மாட வீதிகளான நீலி அப்பாதுரை தெரு, தண்டபாணி தெரு, ஆகிய தெருக்களில் போடப்பட்டள்ள தார்சாலையின் அகலம் குறைவாக உள்ளதால் தேர் இழுக்கும்போது தேர் சாய்ந்து விழும் அபாயம் உள்ளது. மேலும் தார்ச்சாலை சேதமடையும் அபாயம் உள்ளது. எனவே மேற்படி தெருக்களில் சாலையின் இருபுறங்களிலும் கிராவல் வைத்து சாலையினை அகலப்படுத்திட கோரி அருள்மிகு கரிகிருஷ்ணபெருமாள் திருக்கோயில் நிர்வாக அதிகாரி மற்றும் கோயில் நிர்வாகிகளிடமிருந்து கோரிக்கை மனு வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து , மேற்படி சாலையினை அகலப்படுத்திடவும். அதற்கான தோராய செலவினம் ரூ. **9.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 104 /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 201 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

**<u>பொருள் எண் 9</u>**

பொன்னேரி நகராட்சியில் 2022-2023 ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் அலுவலகக்கட்டிடம் மேம்பாட்டு பணி மற்றும் பொருட்கள் இருப்பு அறை அமைத்தல் பணியினை மேற்கொள்ள **22.02.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | அலுவலகக்கட்டிடம் மேம்பாட்டு பணி மற்றும் பொருட்கள் இருப்பு அறை அமைத்தல் | **4.00** | A.T. சந்தானம் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 202 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

**<u>பொருள் எண் 10</u>**

அரசாணை (நிலை) எண் 119 பள்ளிக்கல்வி (பொ.நூ2 ) துறை நாள் 30.06.2022 ன்படி திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்தில் ஆவடி நகர்ப்புற பகுதியில் புத்தக கண்காட்சி நடத்தி வருகிறது. மாணவர்களிடம் படிக்கும் பழக்கத்தை மேம்படுத்திட , அனைத்து அரசு பள்ளிகள் / நகராட்சி பள்ளிகள் / ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலிருந்து அனைத்து மாணவர்களையும் புத்தக கண்காட்சியினை பார்வையிட மாவட்ட நிர்வாகம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது. இருப்பினும் அனைத்து மாணவர்களையும், புத்தக கண்காட்சிக்கு வர வைப்பது சாத்தியமில்லை. எனவே மாணவர்களின் நலனுக்காக அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களிடம் வாசிப்பு திறனை மேம்படுத்தும் கற்றல் மையம் அமைப்பது இன்றியமையாததாகும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 47 மற்றும் 52 விதிகளின்படி கல்வி மேம்பாட்டிற்காக பொது நூலகங்கள் மற்றும் படிக்கும் மையங்களை மேம்படுத்துவது நகராட்சியின் கடமையாகும்.

எனவே திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரசு பள்ளிகள், நகராட்சி பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு நகராட்சியின் கல்வி நிதி அல்லது நகராட்சியின் பொதுநிதியிலிருந்து நகராட்சிகளின் நிதி நிலைகளுக்கேற்ப பள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆவடியில் நடைபெற்று வரும் புத்தக கண்காட்சியிலிருந்து குறைந்தபட்சம் ரூ.50,000/- முதல் அதிகபட்சம் ரூ.5,00,000/- வரையிலான மதிப்பில் புத்தகங்களை கொள்முதல் செய்து சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு வழங்கிடுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.8379/2023 நாள் 24.03.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, குறைந்தபட்சம் ரூ.50,000/- க்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து புத்தகங்கள் கொள்முதல் செய்து சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 223 /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 203 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 11</u>**

பொன்னேரி நகராட்சியில் 2023-2024 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 204 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 12</u>**

பொன்னேரி நகராட்சியில் சின்னக்காவணம் மயானப் பகுதியில் ஈமக்கிரியைகள் செய்ய குடிநீர் வசதி இல்லாததால் சின்னக்காவணம் மயானப்பகுதியில் ஆழ்துளை கிணறு அமைக்கவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 205 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 13</u>**

பொன்னேரி நகராட்சி பகுதியில் நடைபெறும் பொதுநிதி பணிகள் , திட்டப்பணிகள், பொதுமக்கள் பங்களிப்பு பணிகள், குடிநீர் விநியோக பணிகள் மற்றும் பாதாள சாக்கடை பணிகள் ஆகியவை தொடர்பாக அவ்வப்போது அறிக்கைகளும் , விவரங்களும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் , நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் அரசிடமிருந்து கோரப்படுவதால் மேற்படி பொருள் தொடர்பாக விவரங்கள் மற்றும் அறிக்கைகள் உடனுக்குடன் அனுப்பிவைத்திட தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரை திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தினக்கூலி விகிதத்தில் ( பிப்ரவரி 2023 முதல்ஏப்ரல் 2023 வரை) பணிக்கு அமர்த்திக்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரூ 1.00 லட்சம் பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 206 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

**<u>பொருள் எண் 14</u>**

பொன்னேரி நகராட்சியில் அரிஅரன் பஜார் தெருவில் புதிய தெருமின்விளக்கு கம்பங்களுக்கு மின்இணைப்பு வழங்க மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற கேட்பு கட்டணம் ரூ.53500/- மற்றும் ரூ.61700/-ஐ செலுத்தி மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற கேட்பு கட்டணங்களை செலுத்திடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண் 262/2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 207 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 15</u>**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டுக்கு ( 01–04–2023 முதல் 31–03–2024 வரை) கீழ்குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 29–03–2023 ம் ஏலம் நடத்தப்பட்டதில் அதிகபட்ச ஏலம் கோரியவருக்கு ஏலம் காயம் செய்திட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | இன விவரங்கள் | ஏலம் கோரியவர் பெயர் மற்றும் முகவரி | அதிகபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | வண்டிமேடு சுங்கம் வசூலிக்கும் உரிமம் | திரு. E. அருண்ராஜ் 7/98 எ, வ.வு.சி தெரு, என்.ஜி. ஓ நகர் பொன்னேரி | ரூ. 7,08,000 /– |
| 2 | பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம் | திரு. D. அருள் தாயுமான் செட்டி தெரு , பொன்னேரி | ரூ. 1,06,000 /– |

<u>அலுவலக குறிப்பு</u>

அதிகபட்ச ஏலம் கோரிய ஏலதாரரின் ஏலம் காயம் செய்திட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்: 208 நாள்: 31.03.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.